# Dr. S Dharmambal

Many people become famous not because of wealth, power, education and status but because of their dedication. One such a reformer who proved that service to the people could be done through humanity and goodwill was Dr.S Dharmambal.

https://www.tnpscthervuthunaivan.com/

She had the instinct of social service, she studied Siddha medicine and started a hospital in Chennai. Later she entered into the public service. Dr.Dharmambal was born at Karun thattankudi near Thanjavur.

As she was very much influenced by the ideas of Periyar, she showed great interest in implementing widow remarriage, intercaste marriage and women education.

She had also great interest in the development of Tamil literature and Tamil music. She participated in the Hindi agitation program and went to jail many times. Till 1940 the Tamil teachers had no due recogition in the society. They were not paid equal salary like other teachers. So she started an agitation called ‘**Elavu Varam**’. As a result the Education Minister Thiru. Avinasilingam Chettiar announced equal to Tamil teachers like other teachers.

https://www.tnpscthervuthunaivan.com/

To make that students improve their knowledge in Tamil and to score good marks in Tamil “**Chennai Manavar Mandram**” was established. She was the President of this association for more than 10 years.

Appreciating her service to Tamil language and literature she was conferred the title “**Veera Tamilannai**”. She gave the title “Periyar” to E.V.Ramasamy Naickar and “Ealisai Mannar” to M.K.Thiyagaraja Bagavathar.

The great women who sacrificed and dedicated her whole life for the Tamil people, Tamil language and Tamil literature was died in 1959 at the age of 69.

https://www.tnpscthervuthunaivan

https://www.tnpscthervuthunaivan

# டாக்டர் எஸ்.தர்மாம்பாள்

www.tnpscthervuthunaivan.com/

படிப்பு, பதவி, பணம், அந்தஸ்து இவை எதுவுமே இல்லாமல், மக்களுக்குச் சேவை செய்து மனிதாபிமானம் என்ற குணத்தின் மூலம் பலர் புகழ் பெற்றுள்ளனர். அவர்களில் ஒருவராக டாக்டர் எஸ்.தர்மாம்பாள் கருதப்படுகிறார். சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்ட தர்மாம்பாள் சித்த மருத்துவம் பயின்று சென்னையில் மருத்துவமனை ஒன்றை தொடங்கினார். பின்னர் பொதுச்சேவையில் ஈடுபட்டார். தஞ்சாவூருக்கு அருகில் கருந்தட்டான்குடி என்ற இடத்தில் பிறந்தார்.

தந்தை பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட இவர் விதவைகள் மறுமணம், கலப்பு மணம் மற்றும் பெண் கல்வி போன்றவற்றில் ஆர்வம் காட்டினார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும், தமிழ் இசை வளர்ப்பதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு பல முறை சிறை தண்டனை பெற்றார். 1940 ஆம் ஆண்டுவரை சமுதாயத்தில் தமிழாசிரியர்களுக்கு மதிப்பு இல்லை. ஊதியம் உயர்த்தப்படவில்லை. எனவே இழவு வாரம் என்ற போராட்டத்தை தொடங்கினார். இதன் விளைவாக கல்வி அமைச்சராகஇருந்த திரு.அவிநாசிலிங்கம் செட்டியார் பிற ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தைத் தமிழ் ஆசிரியர்களுக்கும் வழங்க உத்தரவிட்டார். www.tnpscthervuthunaivan.com/

www.tnpscthervuthunaivan.com/

தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் தமிழறிவை வளர்க்கவும், அரசுத் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெறவும், பேச்சாற்றல், எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ளவும் சென்னை மாணவர் மன்றம் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றினார்.

இவர் தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய சேவைகளை பாராட்டி ‘வீரத்தமிழன்னை’ என்ற பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டம் பெற்ற தருமாம்பாள் ஈ.வே ராமசாமி நாயக்கருக்கு பெரியார் என்ற பட்டத்தையும், எம்.கே. தியாகராஜ பாகவதருக்கு ஏழிசை மன்னர் என்ற பட்டத்தையும் வழங்கினார்.

www.tnpscthervuthunaivan.com/

தனது உழைப்பு, சிந்தனை அனைத்தையும் தமிழ் மொழி, தமிழிசை, தமிழ் மக்கள் இவற்றுக்காக அர்ப்பணித்த அம்மையார் தனது 69வது வயதில் 1959 ஆம் ஆண்டு காலமானார்..